
# செந்தூவல்



'புரட்சிப் பாதையில் கைத் துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே'


லெனின்

தி. பி 2049 கடகம் ( கி.பி 2018 சூலை ) | தனிச்சுற்றுக்கு மட்டும் | நன்கொடை உரூ. 4/= | இதழ்: 1


## எட்டு வழிச்சாலையும் எடுபிடி எடப்பாடி அரசும்

சேலத்திலிருந்து சென்னைக்கு எட்டு வழி பசுமைவழிச் சாலை அமைப்பதற்கான வேலையை தொடங்கி உள்ளது எடப்பாடி அரசு. இச்சாலை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 59.1 கிலோமீட்டர் , திருவண்ணாமலை மாவட்டத்தில் 123.9 கிலோமீட்டர் , கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 கிலோமீட்டர் , தர்மபுரி மாவட்டத்தில் 56 கிலோமீட்டர் மற்றும் சேலம் மாவட்டத்தில் 36.3 கிலோமீட்டர் என ஆக மொத்தமாக 274 கிலோமீட்டர் நீளத்திற்கு அமையும்.

இச்சாலையில் சேலம் மற்றும் செய்யாறு ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே வாகனங்கள் உள்நுழைவதற்கும்,வெளியேறுவதற்கும் வசதி உள்ளது. மேலும் இச்சாலையில் மொத்தம் எட்டு சுங்கச்சாவடிகள் இருக்கும். இரண்டு நுழைவாயில்கள் மட்டுமே உள்ளதால், வழியில் உள்ள மக்கள் தங்களது வாகனத்தில் இச்சாலைக்குள் உள்ளே செல்ல முடியாது. மேலும் எட்டு சுங்க சாவடிகளிலும் கட்டணம் கட்டி செல்ல வேண்டும். ஆகவே இதனை அனைத்து மக்களும் பயன்படுத்த முடியாது என்பது கண்கூடு. ஏற்கனவே சேலத்திலிருந்து சென்னை செல்ல மூன்று பாதைகள் உள்ளன. இப்பாதைகளுக்கும், புதிதாக அமைக்க உள்ள பாதைக்கும் 70 முதல் 100 கிலோமீட்டர் அளவுதான் தொலைவு வேறுபாடு.




*எட்டு வழிச்சாலையின் ஐங்கோண வரைபடம்*

இந்த சாலைகளை விரிவுபடுத்தினாலே மிக அதிகமான வாகனங்கள் செல்ல முடியும். நாம் விரைவாக சென்றடைய முடியும். மேலும் இருக்கும் சாலைகளில் வெறும் 40 விழுக்காடு அளவுதான் வாகனங்கள் செல்கின்றன. அரசு எடுக்கும் இந்நடவடிக்கையால் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்படும். இவ்விளைநிலங்களை நம்பி உள்ள 30,000 ஏழை விவசாய குடும்பங்களும் கடுமையான பாதிப்பை சந்திக்கும். நூற்றுக்கும் மேற்பட்ட ஏரி, குளங்கள்,குட்டைகள் அழியும், மரங்கள் லட்சக்கணக்கில் வெட்டப்படும் . இச்சாலை வழியில் இருக்கும் வீடுகள்,பள்ளிகள்,கோயில்கள் இடிக்கப்பட உள்ளது. இச்சாலையுடன் மொத்தம் 854 கிராமங்கள் தொடர்புடையதாக உள்ளது. 159 கிராமங்கள் வழியாக செல்கிறது அல்லது இக்கிராமங்களை பிளவு படுத்துகிறது.

மேலும் மொத்தமாக 13.2 ஹெக்டர் வனப்பகுதி அழிக்கப்படும். 8 காப்புக்காடுகள் வழியாக இச்சாலை செல்கிறது. அவையாவன 1.சிறுவாஞ்சூர், 2.நம்பேடு, 3.அலியாமங்கலம், 4. அந்தவாடி, 5.ராவணவாடி , 6.பள்ளிப்பட்டு, 7.ஜருகுமலை 8.சொரக்குளத்தூர் . இதுபோன்ற காப்புக்காடுகள் வழியாக செல்லும் சாலைகள் வனவளத்தை அழிப்பது மட்டுமல்லமல், உயிர்பன்மையத்தன்மை சுழலியலையும் கெடுத்து விடுகிறது.இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதால் அதில் உற்பத்தியாகும் ஆறுகள், அருவிகள்,ஓடைகள் காணாமல் போகும். இதுமட்டுமல்லாமல் இச்சாலை அமைக்க சேலம் மாவட்டத்தில் உள்ள ஜருகுமலை,அறநூற்றுமலை,சேர்வராயன் மலை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலை, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கவுந்தி மலை,வேதிமலைகள் உடைக்கப்படும்.

இத்தனை வளங்களை அழித்து 8 வழிச் சாலை உருவாக்க காரணம் இச்சாலை போடப்படும் 5 மாவட்டங்களிலும் குவிந்து கிடைக்கும் அறிய வகை தாதுகள்தான்.இந்தியாவில் தமிழகத்தில்தான் அரியவகை தாதுக்கள் 2 விழுக்காடு அளவு உள்ளதாக இந்திய அரசின் அறிக்கை கூறுகிறது. (சேலம் மாவட்டத்தில் டியூனைட் ,பிரச்சினைட்,பெல்ஸ்பர், கிரானைட்,மேகின்சைட், குவார்ட்ஸ், சிலிகா, டால்க், ஸ்டைட், சோப்புகள், கால்சைட், குரோமைட் , பிளாட்டினம், டோலமைட், இரும்புத்தாது (மேகனைட்) தர்மபுரி மாவட்டத்தில் கோரண்டம், தங்கம், வெர்மிகுலைட், மாலிப்பிட்டினம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கிரானைட், சீனக்களிமண்,மேகனைடட். வேலூர் மாவட்டத்தில் கிராபைட், சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ், சிலிகா, டால்க், ஸ்டைட், சோப்புக்கல், வெர்மிகுலைட், ஜிர்கோன், பாரைட்ஸ் ,மாலிபிட்டினம் நிக்கல் மற்றும் குரோமியம் )

இவ்வாறு கொட்டிக்கிடக்கும் வளங்களை கார்பரேட்களுக்கு தாரை வார்த்துக் கொள்ளையடிக்க துடிக்கிறது இந்திய அரசும் அதன் எடுபிடி எடப்பாடி அரசும்.

மேலும் இந்த வளங்களை கொண்டு ராணுவ தளவாட பொருட்களின் உற்பத்தியை தொடங்க உள்ளது இந்திய அரசு. இதற்கு ராணுவ தாழ்வாரம் என்று பெயர். இந்த ராணுவ தாழ்வாரம் ஐந்து நகரங்களை மையமாக கொண்டு அமைக்கப்பட உள்ளது. இந்த ஐந்து நகரங்களையும் இணைத்து ஒரு ஐங்கோண வடிவ சாலை அமைப்பை உருவாக்க உள்ளது. இந்த ஐங்கோண சாலையில் இணைக்கபட உள்ள நகரங்கள் பின்வருமாறு:

1.சென்னை 2.கோவை 3. திருச்சி 4.ஓசூர் மற்றும் 5.சேலம்.இந்த ஐந்து நகரங்களும் ஏற்கனவே ஒவ்வொரு பொருள் உற்பத்தி மையமாக விளங்குகின்றன. இதில் முதலாவதாக சேலம் தாதுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் மையமாக இருக்கும். இதில் சென்னையில் ஏற்கனவே உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் அதிக அளவில் ராணுவ



***எதிர்ப்பு தெரிவித்த மூதாட்டியை கைது செய்து அழைத்து செல்லும் காவல் துறை***

தளவாட பொருட்களை உற்பத்தி செய்கின்றன. சென்னையில் 50 என்ஜின் தொழிற்சாலைகளும், 200 கனரக வாகன தொழிற்சாலைகளும் உள்ளது. மேலும் கோவையில் அதிக அளவில் உள்ள வார்ப்பட தொழிற்சாலைகளில் இந்த தாதுக்களை உலோகங்களாக மாற்றிக் கொள்ள முடியும். கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் மட்டும் மொத்தம் 45,000 தொழிற்சாலைகள் உள்ளன. உதாரணமாக கோவையில் உள்ள சிஆர்ஜ பம்பு நிறுவனத்தில் இருந்து கடற்படைக்கு தேவையான பம்புசெட்டுகளும், சாந்தி கியர் நிறுவனத்தில் இருந்து ராணுவ டாங்கிகளுக்கு தேவையான கியர்களும் உற்பத்தி செய்யப்படுகிறது. திருச்சியில் உள்ள பெல் தொழிற்சாலை ராணுவ தளவாடங்களின் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்கிறது.

இம்மாவட்டத்தில் உள்ள 2500 சிறு, குறு நிறுவனங்கள் பெல் நிறுவனத்திற்கு தேவையான உபகரணங்களை தயாரிக்கிறது. இதில் கடைசியாக உள்ள நகரம் ஓசூர். இங்கு ஆட்டோமொபைல் தொழில் சிறப்பாக உள்ளது. இதனை பயன்படுத்தி ராணுவ வாகனங்களை உற்பத்தி செய்ய முடியும் . இந்த ஐந்து நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளை பயன்படுத்தி ராணுவ தளவாட பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இது மட்டுமல்லாமல் இங்கு அதிக அளவில் திறன் சார்ந்த பொறியியல் பட்டதாரிகள் உள்ளனர்.இதன்மூலம் மலிவான விலைக்கு உழைப்பு சக்திகிடைக்கும். இதனால் ராணுவத் தளவாடப் பொருட்களை மலிவான விலையில் தயாரிக்க முடியும்.

மேலும் இந்த வளங்கள் ராணுவத் தளவாடப் பொருட்கள் உற்பத்தி செய்ய மட்டும் உபயோகபடுத்தப்படுவதில்லை. இவ்வுற்பத்தி அல்லாத பிற தாதுப்பொருள்களை நேரடியாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த எட்டுவழி சாலை திட்டத்தை தொடங்குவதற்கு முன் தமிழக அரசு மத்திய சுற்று ச்சூழல் அமைச்சகத்திடம் முறையான அனுமதி பெறவில்லை. மேலும் ஒரு திட்டத்தை தொடங்குவதற்கு முன்பு செயலாக்க ஆய்வு(feasibilty study) ஒன்றை நடத்த வேண்டும். ஆனால் தமிழக அரசு எந்தவொரு செயலாக்க ஆய்வும் செய்யவில்லை.இந்திய அரசின் உத்தரவு வந்தவுடன் எந்தவொரு விதிமுறைகளையும் கடைப்பிக்காமல் அதிவேகமாக செயல்படுத்த தொடங்கி உள்ளது எடப்பாடி அரசு. இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த வளர்மதி,பியூஸ் மனுஷ் ,மன்சூர் அலிகான் மற்றும் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் நில அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டபோது எதிர்ப்பு தெரிவித்த வயதான மூதாட்டியை கூட தமிழக காவல் துறை விட்டுவைக்காமல் கைது செய்துள்ளது. இத்திடத்தால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என பல விவசாயிகள் தீக்குளிக்க முற்பட்டனர். பலர் தற்கொலை செய்ய முயன்றனர். மேலும் பொதுமக்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், அரசியல் கட்சிகளும் இத்திட்டத்தை கடுமையாக எதிர்த்து வரும் நிலையில் எடப்பாடி அரசோ மூர்கத்தனமாக இதை நடைமுறைப்படுத்த எத்தணித்து வருகிறது.

ஏன் இந்த அவசரம்?

டெல்லி அரசின் மக்கள் விரோத திட்டங்களை கேள்விக்கிடமின்றி செயல்படுத்தும் அடிமை அரசாகவே மாநில அரசு உள்ளது. தமிழ்நாட்டுக்கு எட்டு வழிச்சாலை வேண்டுமா? வேண்டாமா? என தீர்மானிக்க வேண்டியது யார்?

எங்கேயோ பல மைல்களுக்கு அப்பால் உள்ள டெல்லியா? காலங்காலமாக இம்மண்ணை பாதுகாத்து வரும் தமிழக மக்களா?

அரசு கொண்டுவரும் எந்த ஒரு திட்டத்தையும் ஏற்றுக்கொள்வதும் புறக்கணிப்பதும் மக்களின் உரிமை. ஒரு தேசத்தின் வளங்களை எப்படி பயன்படுத்துவது என தீர்மானிக்க வேண்டியது அத்தேசத்தின் மக்கள். அது தான் தேசிய உரிமை. ஆனால்

*...தொடர்சி 2 ஆம் பக்கம்*

# வேதாந்தாவை விரட்டியடிப்போம் !

வேதாந்தா ரிசோர்சஸ் லிட்., உலகளாவிய அளவில் இயங்கும் ஒரு பெருங்குழும நிறுவனமாகும். இதன் தலைமையகம் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் மாநகர். இதன் முதன்மைத் தொழில் சுரங்கம் மற்றும் கனிம வளங்கள் சார்ந்தது. வேதாந்த நிறுவனம் இந்தியாவின் தேசிய பங்குச் சந்தையிலும், இலண்டன், மற்றும் நியூயார்க் பங்குச் சந்தையிலும் பட்டியல் இடப்பட்டுள்ளது.

வேதாந்தாவின் தலையாய சொந்தக்காரர் அனில் அகர்வால் என்கின்ற மார்வாடி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இந்தியத் தரகு முதலாளி. இவர் 1969 இல் மும்பையில் பழைய இரும்பு, ஓட்டை உடல்சல்களை வாங்கி விற்கும் வணிகத்தை தன் தந்தையுடன் சேர்ந்து தொடங்கினார். 1979 இல் இவர் சேம்சர் இசுடெர்லிங் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தை விலைக்கு வாங்கி அதற்கு இசுடர்லைட் இண்டசுட்ரீசு என்று பெயர் மாற்றம் செய்ததைத் தொடர்ந்து 1988 இல் இசுடெர்லைட் இண்டசுட்ரீசு ( இந்தியா ) லிட்., என்ற பெயரில் பொதுமக்கள் பங்குகள் விநியோகத்தின் மூலம் மூலதனச் சந்தையில் நுழைந்தார்

இது இரும்பு அல்லாத (Non-ferrous) வேதியியல் தன்மை கொண்ட உலோகங்களின் மிகப் பெரிய குழுமங்களை இந்தியாவில் கொண்டுள்ளது. சாம்பியா, தென் ஆப்ரிக்கா, லிபேரியா, அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் இயங்கி வருகிறது. மேலும் ஆசுத்திரேலியா, சாம்பியா ஆகிய நாடுகளில் சுரங்கத் தொழிலையும், எரிவாயு மற்றும் எண்ணெய் நிறுவனங்களையும் கொண்டுள்ளது. இதன் முதன்மையான விளைபொருட்கள் துத்தநாகம், ஈயம், வெள்ளி, எண்ணெய் மற்றும் எரிவாயு, இரும்புத் தாது, எஃகு, அலுமினியம், செம்பு, தங்கம் மற்றும் மின்சாரம் முதலியன.

இது இந்தியாவில் ஒடிசா, சட்டீசுகர், கோவா, தமிழ்நாடு மற்றும் ராசசுதான் ஆகிய மாநிலங்களில் சுரங்கங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. ஒடிசாவிலும், பஞ்சாபிலும் வணிக ரீதியிலான இரண்டு மின் நிலையங்களை நிறுவியுள்ளது.

இதன் துணை நிறுவனங்கள் இசுடர்லைட் இண்டசுட்ரீசு, இந்துசுதான் சிங் லிட்., சேச கோவா, பாரத் அலுமினியம் கம்பெனி, மால்கோ, வேதாந்த அலுமினியம், இசுடர்லைட் எனர்சி, ஆசுத்திரேலியன் காப்பர் மைன்சு, இசுடர்லைட் டெக்னாலசீசு, கொன்கோலா காப்பர் மைன்சு, கெய்ன் இந்தியா லிட்., முதலியன. இது இயங்கும் எல்லா இடங்களிலும் சட்ட விதிகள் மீறல், சுற்றுச்சூழல் மாசு, மனித உரிமைகள் மீறல் போன்ற பல மோசடிகளில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ்நாடு தூத்துக்குடியில் உள்ள இசுடர்லைட் தாமிர உருக்காலை மற்ற நிறுவனங்களைக் காட்டிலும் மிக மோசமான செயல்பாட்டைக் கொண்டுள்ளது. இது சிலி நாட்டிலிருந்து இரண்டாம்கை நிறுவனமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று. இது தமிழ்நாட்டில் நிறுவப்படுவதற்கு முன் நான்கு மாநிலங்களில் இருந்து மக்களின் தொடர்ந்த போராட்டங்களால் விரட்டியடிக்கப்பட்டது.

**தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி நகரில் 22.05.2018 அன்று நடந்த ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு, காவல்துறையின் வன்முறை ஆகியவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகள், மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்காக மக்கள் உரிமைக் கழகத்தின் உண்மை அறியும் குழுவினர் கடந்த 30.05.2018, 31.05.2018 ஆகிய தேதிகளில் கள ஆய்வு நடத்தினர். அக்குழுவின் பரிந்துரைகள்:**

1. 14 பேரின் உயிரைக் காவு வாங்கிவிட்டு, நூற்றுக்கணக்கான மக்களை உடல் ஊனமாக ஆக்கிவிட்டிருப்பது, கொடூரமான ஒடுக்குமுறை ஆகும். தமிழக அரசு வெளியிட்டுள்ள ஸ்டெர்லைட்டை மூடுவதற்கான அரசாணை என்பது உரிய காரணத்தையும், அறிவியல் பூர்வமான ஆதாரங்களையும் உள்ளடக்கியதாக அமையவில்லை. மேற்படி அரசாணைக்கு எத்தகைய சட்ட வலிமையும் இல்லை. சட்ட வலிமையற்ற இந்த அரசாணைக்குப் பதிலாக மக்களுக்கும், இயற்கைக்கும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான தொழிற்சாலைகள், நிறுவனங்கள் தமிழ்நாட்டில் நிறுவப்படுவதில்லை என்கிற கொள்கை முடிவினைத் தமிழக அரசு எடுக்க வேண்டும்.

2. துப்பாக்கிச் சூடு மற்றும் காவல்துறையின் வெறித்தனமான வன்முறையினால் பலியான 14 பேரின் சாவிற்கும், நூற்றுக்கணக்கான மக்களின் இரத்தக் காயத்திற்கும் காரணமான காவல்துறையினர், ஏவிய ஆட்சியாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் மீது கொலை வழக்கு மற்றும் உரிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்.

3. ஸ்டெர்லைட் ஆலையின் முதல் மற்றும் இரண்டாம் யூனிட்டுகளுக்காகத் தமிழக அரசு கையகப்படுத்திய விவசாய நிலங்களை உரிய விவசாயிகளிடமே திரும்ப வழங்க வேண்டும்.

4. மக்களுக்கும், இயற்கைக்கும் பேரழிவு ஏற்படுத்திய ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் நலனில் அக்கறை கொண்ட அறிவியலாளர்கள், மருத்துவர்கள், நீதிபதிகள் ஆகியோரைக் கொண்ட விசாரணை ஆணையம் அமைத்து, ஸ்டெர்லைட் ஆலையினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் சிக்கல்கள், ஸ்டெர்லைட் ஆலையின் விதி மீறல்கள், மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மீது குற்ற வழக்குப் பதிவு செய்ய வேண்டும். மேலும், பாதிப்புகளை மறு சீரமைப்பு செய்வதற்கான முழுப் பொறுப்பையும் ஸ்டெர்லைட் நிறுவனத்தையே ஏற்கச் செய்ய வேண்டும்.

5. ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கும் கட்சிகளுக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும், காவல்துறையினருக்கும் இடையிலான உறவு குறித்தும், ஸ்டெர்லைட் நிறுவனத்தால் அவர்கள் பெற்ற ஆதாயம் குறித்தும்; மே-22,23 ஆகிய தேதிகளில் நிகழ்ந்த வன்முறைக் குறித்தும் மக்கள் நலனில் அக்கறையுள்ள ஒய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு.சந்துரு, திரு.ஹரிபரந்தாமன் மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்களைக் கொண்ட சுதந்திரமான விசாரணைக்குழுவினை அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

6. விசாரணை என்கிற பெயரில் அப்பாவி பொதுமக்களையும், சமூக முன்னணியாளர்களையும் கைது செய்யும், துன்புறுத்தும் நடவடிக்கைகள், சமூக முன்னணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் அனைத்தையும் காவல்துறைக் கைவிட வேண்டும்.

7. ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் உட்பட்ட வழக்குகள் அனைத்தையும் இரத்து செய்ய வேண்டும். கைது நடவடிக்கையை கைவிட வேண்டும்.

8. காவல்துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையில் உயிரிழந்த பரத்ராஜாவின் குடும்பத்துக்கும் தமிழக அரசு முழு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்.

9. ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் காவல்துறையின் அடக்குமுறையால் பலியான 14 பேருக்கும் நினைவுச் சின்னம் அமைக்க, தூத்துக்குடியின் மையப்பகுதியில் அரசு இடம் ஒதுக்கித் தர வேண்டும்.

# அரசியல் போராட்டங்களில் குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் கலத்துக் கொள்ளக் கூடாது

## காங்கேயம் காவல்துறையின் அராஜக போக்கு

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் புஇமு நடத்தும் நிகழ்ச்சிகளில் குழந்தைகள், பெண்கள் கலந்து கொள்ளக்கூடாது, அவ்வாறு கலந்து கொண்டால் அந்நிகழ்வுகளுக்கு அனுமதி அளிக்க மாட்டோம் எனதொடர்ந்து தடை போட்டு வந்தது காங்கேயம் காவல்துறை. கார்ல் மார்க்ஸின் 200 வது பிறந்தநாள் விழாவிற்கு குழந்தைகளை அழைத்து வரக்கூடாது என கட்டாயப்படுத்தி எழுதி வாங்கிய பின்பே நிகழ்ச்சிக்கு அனுமதி தந்தது போலீசு . போலீசின் அதிகார திமிரைக் கண்டித்து புஇமுவை சேர்ந்த பெண்கள் அணிதிரண்டு திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டனர். சம்பத்ப்பட்ட காவல் அதிகாரியை அழைத்து பெண் தோழர்கள் முன்பாகவே எச்சரித்துள்ளார் ஆட்சியர்.

இன்றைக்கு தமிழகத்தில் நடைபெறும் உரிமைப் போராட்டங்களில் முன்னணியாக நின்று செயல்படுவது பெண்கள் தான். ஆளும் வர்க்கங்களின் மக்கள் விரோத திட்டங்களுக்கு எதிராக பெண்கள் தொடுக்கும் கேள்விக் கனைகளை எதிர்கொள்ள முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது அரசு. பெண்கள் பெருமளவில் போராட்டங்களில் பங்கெடுப்பதால் தானும் தன்னுடைய எசமானர்களும் (டெல்லி அரசும், பன்னாட்டு முதலாளிகளும்) அம்பலப்படுவதை தடுக்க காவல்துறையின் மூலம் இத்தகைய கீழ்த்தரமான செயல்களை செய்து வருகிறது எடப்பாடி அரசு.

மேலும், இயல்பாகவே போலீசிடம் பார்ப்பனிய ஆணாதிக்க மனோபாவம் மேலோங்கியுள்ளது. ஆணுக்கு சரிநிகராக பெண்கள் விளங்குவதை மற்ற துறைகள் போல போலீஸ்துறையும் விரும்புவதில்லை. குறிப்பாக பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை மிக தீவிரமாக எதிர்க்கிறது. கல்வியறிவிலும், பொருளாதாராத்திலும் பெண்கள் முன்னேறினாலும் அவர்களை ஆணுக்கு சேவை செய்யும் அடிமையாகவே நடத்துகிறது இந்த சமூகம். போலீசோ இந்த சமூக பிற்போக்கு கட்டமைப்புகளை மீறி - அதனை உடைத்தெறிந்து - பொதுவெளிக்கு வருபவர்களை அச்சுறுத்துகிறது.

இறுதி வரை பெண்கள் ஆணுக்கு - திருமணம் வரை தந்தைக்கும், திருமணத்திற்கு பின் கணவனுக்கும் - அடிமையாகவே இருக்க வேண்டும், அதற்காக சாதிய கட்டுமானத்தை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பது தான் பார்ப்பனிய இந்து மதத்தின் மனுசாஸ்திரம் போதிக்கும் விடயம். அதையேதான் 'ஹிந்தி'ய அரசியல் அமைப்பு சட்டமும் பின்பற்றுகிறது. பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் இவைகளை தான் போலீஸ்துறையும் செயல்படுத்துகிறது.

இவற்றையெல்லாம் எதிர்த்த போராட்டத்தின் மூலமாகதான் முழுமையான பெண் விடுதலையை சாதிக்க முடியும்.

### எட்டு வழி சாலையும்...

*முதல் பக்கத் தொடர்ச்சி...*

டெல்லி அரசோ தமிழ்த்தேசியத்தின் அரசுரிமையை பறித்து ஆதிக்கம் செலுத்திவருகிறது. வளர்ச்சி என்ற பெயரில் அனைத்து நாசகார திட்டங்களையும் நம் மீது திணித்து வருகிறது. யாரும் இதன் மீது கேள்வி எழுப்பக் கூடாது. மீறி எழுப்பினால் அவர்கள் மீது தேச விரோதிகள், நக்சலைட்கள் என முத்திரைக் குத்துகிறது. எதிர்த்து போராடுபவர்களை மாநில அரசின் போலீசு படையை வைத்து ஒடுக்குகிறது. முந்தைய காங்கிரசு அரசை விட தற்போதைய பா.ச.க அரசு தமிழகத்தின் உரிமைகளை பறித்து ஒடுக்கும் வேலையை மிக தீவிரமாக செய்து வருகிறது.

இந்திய அரசு வீசும் எலும்பு துண்டுகளுக்காக எத்தகைய இழிசெயலையும் செய்ய தயாராக உள்ளது மாநில அரசு. எட்டுவழிச்சாலையை அம்பலப்படுத்தி துண்டறிக்கை விநியாகித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கேள்வி எழுப்பிய போராளிகள் சிறைவைக்கப் பட்டுள்ளார்கள்.


இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களும் ஒடுக்கப்பட்டாலும் தமிழ்த்தேசியத்தின் மீதான பார்ப்பன இந்து தேசியத்தின் ஒடுக்குமுறைதான் மிக தீவிரமாக உள்ளது. அதேபோல் மாநில அரசுகள் அனைத்தும் அடிமை அரசாக இருப்பினும் தமிழக அரசுதான் டெல்லியின் சிறந்த எடுபிடி அடிமை அரசாக உள்ளது. பன்னாட்டு - தரகு முதலாளிகளின் வேட்டைக்பாடாக தமிழகம் மாற்றப்பட்டுள்ளது.

இத்தகைய அடிமை அரசை தூக்கியெறிந்து விட்டு மக்கள் கையில் அதிகாரமுள்ள தன்மானமிக்க தமிழ்தேசியத்தை உருவாக்குவதன் மூலமே இது போன்ற அழிவு திட்டங்களை முற்றிலும் தடுத்திட முடியும்.

# பருவ நிலை மாற்றமும் அடிமைத் தமிழகமும் - பகுதி 1

உலகம் முழுவதும் உள்ள பதினைந்தாயிரம் விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து மனிதகுலத்திற்கு எச்சரிக்கை என்ற பெயரில் பருவநிலை மாற்றம் தொடர்பான ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளனர். கடந்த 200 ஆண்டுகளாக முதலாளித்துவம் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் சீரழித்த சுற்றுப்புற சூழல் மற்றும் வளிமண்டல பாதிப்பு காரணமாக நாம் இந்த பருவநிலை மாற்றத்தை எதிர்கொண்டு உள்ளோம். இதனைப் பற்றி நாம் விரிவாகக் காண்போம். பொதுவாக சூரியனில் இருந்து வரும் கதிர்கள் நேரடியாக பூமியின் மீது பட்டு எதிரொலிக்கிறது. இதனால் சூரியனில் இருந்து வரும் கதிர்கள் புவியில் பட்டு எதிரொலிப்பதால் பூமியின் மீது அதிகமான வெப்பம் சூரிய ஒளி பூமியின் மீது விழும்போது மட்டுமே இருக்கும். இந்த வெப்பமானது பூமியில் தக்க வைக்கப்படுவதில்லை.


ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சி ஏற்பட்டது. இந்த தொழில் புரட்சியில், தொழிற்சாலை எரிபொருட்களாக புதைபடிம எரிபொருட்களான நிலக்கரி, பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயு மற்றும் மீத்தேன் அதிக அளவில் உபயோகப்படுத்தப் பட்டன. அதன் விளைவாக அதிகமான பசுமை இல்லா வாயுக்கள் வளிமண்டலத்தில் கலந்தன. இந்த பசுமை இல்ல வாயுக்கள் வெப்பத்தை தக்க வைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றது. கார்பன்( கரியமில வாயு), நைட்ரஸ் ஆக்ஸைடு, மீத்தேன், க்ளோரோ ப்ளூரோ கார்பன், ஹைட்ரோ புளூரோ கார்பன் மற்றும் ஓசோன் போன்ற வாயுக்கள்தான் பசுமை இல்ல வாயுக்கள் எனப்படும். இந்த வாயுக்களை வளிமண்டலம் உறிஞ்சி எடுத்துக் கொண்டு வெப்ப அகச்சிவப்பு கதிர்களை உமிழ்கிறது. இந்த நிகழ்வைத்தான் நாம் பசுமைஇல்ல விளைவு என்று கூறுகிறோம்.




**மேற்கண்ட படம் புவி வெப்பமடைதல் தொடர்பான வரைபடம் ஆகும்**

பொதுவாக பூமியின் சராசரி வெப்பநிலை -18 டிகிரி செல்ஸியஸ் ஆகும். ஆனால் இந்த நிகழ்வின் காரணமாக பூமியின் சராசரி வெட்பநிலை +15 டிகிரி செல்சியசு அளவு உயர்ந்து உள்ளது. பொதுவாக இந்த பசுமை இல்ல வாயுக்கள் வெப்பநிலையை தக்க வைத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவை. இதன் காரணமாக சூரியனில் இருந்து வரும் வெப்பம் பூமியில் பட்டு எதிரொலிப்பது இல்லை. இவை வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களால் தக்க வைக்கப்படுகிறது. இதனால் பூமியின் வெப்பம் பலமடங்கு உயருகிறது. இதனைத்தான் நாம் புவி வெப்பமைடைதல் என்று கூறுகிறோம். இந்த புவிவெப்பமடைதலில் அதிகமாக பல்வேறு வாயுக்கள் முதன்மையான பங்கு வகிக்கின்றன. அவற்றில் முதன்மையாக உள்ளது நீராவி ஆகும். இந்த நீராவியால் 36 சதவீதம் முதல் 72 சதவீதம் புவி வெப்பமடைகிறது. அதற்கு அடுத்த நிலையில் கரியமில வாயுவினால் 9% முதல் 26% சதவீதமும், மீத்தேன் வாயுவினால் 4% முதல் 9% சதவீதமும், ஓசோன் வாயுவினால் மூன்று முதல் ஏழு சதவீதமும் வெப்பநிலை உயருகிறது.

வளிமண்டலத்தில் கார்பனின் அளவு 250 மில்லியனில் ஒரு பகுதி என்ற அளவில்தான் இருக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால் தற்போதைய சூழலில் 400 மிலியனில் ஒரு பங்கு என்ற அளவுக்கு உயர்ந்து உள்ளது. இந்த கார்பன் துகள்கள் ஆனது சூரியனில் இருந்து வரும் கதிர்கள் பூமியில் பட்டு எதிரொலித்து வெளியே செல்லாமல் தடுக்கிறது. இதன் காரணமாக வெப்பம் வளிமண்டலத்திலேயே தக்க வைக்கப் படுகிறது. இந்த நிகழ்வுதான் புவி வெப்பமடைதல் என்று பெயர். இந்த புவி வெப்பமடைதல் காரணமாக பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. இந்த நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்த நிகழ்வு ஆகும். இவ்வாறு புவி வெப்பமடைதல் காரணமாக பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. இந்த புவிவெப்பமடைதலுக்கு முதன்மையான காரணம் புதைபடிம எரிபொருட்கள் ஆகும். அது மட்டுமல்லாமல் காடழிப்பு போன்ற மனித நடவடிக்கைகளால் உருவாகிறது.




**மேற்கண்ட படம் புவி வெப்பமடைதலை விளக்கும் படம் ஆகும் இந்தப் படத்தில் 1880 களில் எவ்வாறு பூமி இருந்தது என்பது பற்றியும், தற்போது உள்ள சூழலில் எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் விளக்குகிறது.**


கி.பி 2000 ஆம் ஆண்டுக்கு பின் வந்த ஒவ்வொரு ஆண்டும் வெப்பமான ஆண்டாக இருந்து உள்ளது. கடந்த 17 ஆண்டுகளும் வெப்பமான ஆண்டாக உள்ளது. 1880 ஆம் ஆண்டுகளில் இருந்து புவி வெப்பநிலை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 0.8 டிகிரி செல்சியஸ் அளவு உயர்ந்துள்ளது. அதில் மூன்றில் இரண்டு பாகம் 1975 ஆம் ஆண்டுக்கு பின் தான் இந்த வெப்பநிலை உயர்வு ஏற்பட்டது.

சூரியனில் இருந்து வரும் வெப்பமானது 70% பூமியினால் உறிஞ்சப்படுகிறது. மீதமுள்ள 30% வளிமண்டலத்தில் எதிரொலிக்கப்படுகிறது. இந்த 70% வெப்பமானது நிலம் மற்றும் கடலினால் உறிஞ்சப்படுகிறது. இந்த வெப்பம் குளிர்ந்த பூமியை மீண்டும் வெப்பப்படுத்த உதவுகிறது. 1750 பின் ஏற்பட்ட தொழில் புரட்சியின் காரணமாக புதைப்படிம எரிபொருட்களான நிலக்கரி, டீசல், பெட்ரோல், மீத்தேன் போன்றவற்றின் அதிக அளவு பயன்பாட்டின் காரணமாக புவி வெப்பநிலை உயர்ந்து உள்ளது. தொழில்புரட்சியின் காரணமாக கார்பன் அளவு 38% அதிகமாவும், மீத்தேன் வாயு அளவு 148% அதிகமாவும் உள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இன்று வளிமண்டலத்தில் அதிக அளவு பசுமை இல்ல வாயுக்கள் நிறைந்து உள்ளது. இந்த வாயுக்கள் சூரியனில் இருந்து வரும் அகச்சிவப்பு கதிர்களை ஈர்த்து கொள்ளும். அதன்பின் அந்த வெப்பத்தை மீண்டும் பூமியின்மீதே விடும். இதனால்தான் பூமியின் வெப்பநிலை அதிக அளவு உயருகிறது. இந்த புவி வெப்பமடைதல் என்பது பனியுகத்தில் இருந்து இன்றைய புவி வெப்பநிலைக்கு மாறியபோது இருந்த வெப்பநிலை உயர்வைக் காட்டிலும் இருப்பது மடங்கு அதிகமாக உள்ளது. கடல் நீரின் வெப்பநிலை கடந்த 150 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஒரு டிகிரி செல்ஸியஸ் அளவு உயர்ந்து உள்ளது. இந்த வெப்பநிலை காரணமாக அதிக அளவு நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்கு செல்லும். இதனால் அதிக அளவு மழை பொழிவு ஏற்படும். இதனால் வெள்ள பாதிப்புகள் ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளது.

# கோவையில் தனியார்மயமாகும் தண்ணீர் விநியோகம்

கோவை மாநகரத்தின் நீர் விநியோக உரிமையை 26 ஆண்டு கால குத்தகைக்கு எடுத்து உள்ளது சூயஸ் என்ற பிரெஞ்சு நிறுவனம். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு 3216 கோடி. முதல்கட்டமாக கோவை மாநகரத்தின் 60 வார்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட உள்ளது. 100 கிலோமீட்டர் சுற்றுவட்ட பரப்பில், மொத்தம் 1,50,000 இணைப்புகள் கொடுக்கப்பட உள்ளன. மொத்தமாக கோவை மாநகரத்தின் 1200 கிலோமீட்டர் நீளத்திற்கு சுற்றுவட்ட பரப்பில் இந்த நீர் விநியோகம் இருக்கும். கோவை மாநகரத்திற்கு தேவையான நீர் விநியோகிக்கும் நீர்த்தேக்கங்கள் பராமரிப்பு மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் பராமரிப்பு அனைத்தும் சூயஸ் நிறுவனம் வசம் சென்றுவிடும். இதன் மூலம் கோவை நகருக்கு குடிநீர் வழங்கும் மூன்று அணைகள் அதாவது பில்லூர், சிறுவாணி மற்றும் ஆழியாறு அணைகள் சூயஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும். அது மட்டுமல்லாமல் கோவையை சுற்றி உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் கிணறுகள் என அனைத்து நீர்நிலைகளும் சூயஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்.

இதோடு அல்லாமல் வீட்டுக்கு நீர் இணைப்புகள் கொடுத்தல், நீர்மானிகள், வால்வுகள் அமைத்தல் என்று அனைத்து பணிகளையும் செய்ய உள்ளது சூயஸ் நிறுவனம். 1997ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் டெல்லி மாளவியா பகுதியில் நீர் விநியோகத்தை செய்து வருகிறது. தற்போது கோவை மட்டுமல்லாமல்





பெங்களூரு, கொல்கத்தா, தேவநகரியிலும் நீர் விநியோகத்தை தொடங்க உள்ளது.

மேற்கண்டவை அனைத்தும் நம் கற்பனை அல்ல. பத்திரிக்கைகளில் வெளியானவை. நீர் விநியோகத்தில் ஈடுபடும் சூயஸ் நிறுவனம் ஏற்கனவே பொலிவியாவிலும், அர்ஜென்டினாவிலும் நீர் விநியோகத்தை எடுத்து இருந்தது. அங்கு உள்ள அனைத்து நீர் நிலைகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. மேலும் நீர் மானிகளை அமைத்து நீர் விநியோகம் செய்தது. அதன்பின் நீரின் விலையை கூட்டிக்கொண்டே சென்றது. வாங்க முடியாத மக்கள் குளங்கள், ஆறுகளில் நீர் எடுத்தனர். இதனையும் தடுத்தது சூயஸ் நிறுவனம். காரணம் ஆறுகள், குளங்கள் அனைத்தும் ஒப்பந்தப்படி சூயஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

ஒரு கட்டத்தில் மிகப்பெரிய மக்கள் போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டத்தை பொலிவியா மற்றும் அர்ஜென்டினா அரசுகள் துப்பாக்கி முனையில் ஒடுக்கப் பார்த்தது. ஆனால் மக்களின் இடைவிடாத போராட்டத்தின் காரணமாக சூயஸ் நிறுவனம் அந்நாடுகளை விட்டு துரத்தியடிக்கப்பட்டது. இதுதான் சூயஸ் நிறுவனத்தின் தென்னமெரிக்க கண்டத்தின் வரலாறு. இப்படி மக்களால் துரத்தியடிக்கப்பட்ட சூயஸ் தான் கோவை நகருக்கு தேவையான நீரை வழங்குகிறதாம்.

தண்ணீர் விநியோகத்திற்கான கட்டணத்தை மாநாகராட்சிதான் வசூலிக்கும் என்பதால் மக்கள் அச்சப்பட தேவையில்லை என்கிறார் கோவை மாநகராட்சி ஆணையர். ஆனால், உண்மை என்ன? பிற நாடுகளில் சூயஸ் நிறுவனமே கட்ணத்தை வசூலித்ததால் மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாகியது. அதுபோல் இங்கும் நடந்துவிடக் கூடாது என்பதற்காக உத்தியை மாற்றியுள்ளனர். அரசே ‘சேவைக் கட்டணம்’ என்ற பெயரில் மக்களிடம் பணத்தை வசூல் செய்து சூயஸ் நிறுவனத்திற்கு கொடுக்கும் ஏஜென்டாக செயல்பட உள்ளது.

மேலும், கோவை மாநகராட்சியோ இந்நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை வெளியிட மறுக்கிறது. இந்த திட்டம் குறித்து கருத்து தெரிவிப்பவர்கள் உடனடியாக கைது செய்யப்படுகிறார்கள். இது குறித்து சமூக வலைத்தளத்தில் கருத்து பரப்புவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்து உள்ளது கோவை மாநகராட்சி. உண்மையில் சரியான திட்டமெனில் கோவை மாநகராட்சி ஒப்பந்தத்தை வெளியிட மறுப்பதேன்? கோவையும் அடுத்த பொலிவியாவாகவோ அல்லது அர்ஜென்டினவாகவோ மாற உள்ளது




என்பதுதான் உண்மை.

**காசுல்லுவனுக்கே தண்ணீர்**

கல்வி, மருத்துவம், குடிநீர், போக்குவரத்து என அனைத்து சேவைத்துறைகளையும் அரசு தனியார் கையில் தாரைவார்த்துவிட வேண்டுமென்று ‘உலக வங்கி’, ‘உலக வர்த்தக கழகம்’ தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. ஏனெனில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் வளங்களை கொள்ளையடிப்பதற்காக மக்களுக்கு தெரியாமலேயே நாடாளுமன்றத்தில் ‘காட்’ (வணிக மற்றும் கட்டண விகிதத்திற்கான பொது ஒப்பந்தம்)’ எனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது டெல்லி அரசு. இதன் தொடர்ச்சியே இந்த தண்ணீர் தனியார்மயமாக்கல் நடவடிக்கை.

- ♦ தமிழக அரசே கொள்கை முடிவெடுத்து ஸ்டெர்லைடை இழுத்து மூடு!
- ♦ துப்பாக்கி சூடு - வன்முறை வெறியாட்டம் நடத்திய அதிகாரிகள் மீது கொலை வழக்கைப் பதிவு செய்!
- ♦ போராடும் இயக்கங்கள் மீது சமூக விரோதி என்று முத்திரை குத்தாதே!
- ♦ விசாரணை என்ற பெயரில் மக்களை ஒடுக்காதே! போடப்பட்ட வழக்குகளை திரும்பப்பெறு!
- ♦ ஸ்டெர்லைட் ஆலையை தரை மட்டம் ஆக்கி 14 ஈகியரின் நினைவிடத்தை அமைத்திடு!

**தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போரட்டத்தில் நடத்தப்பட்ட அரசப் படுகொலை மற்றும் பயங்கரவாதத்தை கண்டித்து தமிழ்நாடு அளவில் புரட்சிகர இளைஞர் முன்னணியினர் நடத்திய கண்டன ஆர்ப்பட்டம் மற்றும் அரங்கக்கூட்டங்கள்**


சென்னை


திண்டுக்கல்


ஈரோடு


காங்கயம்


கோவை


சேலம்


திருப்பத்தூர்


திருவண்ணாமலை


தே.கல்லுப்பட்டி


திருப்பூர்


மதுரை


மக்கள் உரிமைக் கழகம் - ஊடக சந்திப்பு

**அரங்கக்கூட்டம் நடைபெற்ற இடங்கள்**


கோவை


ஈரோடு


மதுரை


திருப்பத்தூர்

## பிராமணீயத்தின் தீய செயல்கள்

**(1) ஆட்சி செய்வதற்கும் மன்னனைக் கொல்வதற்கும் பிராமணனுக்கு உரிமை உண்டு என்பதை நிலை நிறுத்தியது. (2) பிராமணர்களைத் தனிச் சலுகைகள் பெற்ற வகுப்பாக அது ஆக்கியது. (3) இது வர்ணத்தைச் சாதியாக மாற்றியது. (4) வெவ்வேறு சாதிகளிடையே போராட்டங்களையும் சமூக விரோத உணர்வையும் அது உருவாக்கியது. (5) அது, சூத்திரர்களையும், பெண்களையும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளியது. (6) படிப்படியாக ஏற்றத்தாழ்வு முறையை அது தோற்றுவித்தது. (7) மரபொழுங்குகளை அடிப்படையாகக் கொண்டதும், நெளிவு சுளிவானதாகவும் இருந்த சமூக அமைப்பை அது மாற்றி சட்டத்துக்கு உட்பட்டதாகவும், கடுமையானதாகவும் செய்தது.**

***- அண்ணல் அம்பேத்கர்***

**சங்கராச்சாரி, சாஸ்திரி முதலியானவர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இந்து மதத்தை (வேதபுராணத்தை)த் தலையாகக் கொண்டு நடத்தப்படும் பிரச்சாரம் என்றால் - காந்தியார், காங்கிரசு, நேரு, ஆச்சாரியார், சாப்ரு முதலியவர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இந்தியாவில் உள்ள இந்துக்கள் அல்லாத (வேதபுராணங்களை ஒப்புக் கொள்ளாதவர்கள் அல்லாத) மற்ற மக்களையும் தங்கள் ஆதிக்கத்திற்குள் கீழ்ப்படுத்தித் தங்களுக்கு எதிராக உள்ளவர்களை அடக்கி ஒடுக்கி ஒழித்துவிடுவதற்குத் தேசம், சுயராஜியம் என்பவற்றைத் தலையாகக் கொண்டு செய்யப்படும் காரியமேயாகும்.**

***- தந்தை பெரியார்***

**அம்பேத்கரும், பெரியாரும் அன்று சொன்னதுதான் இன்றும் நடந்து வருகிறது..**

தொடர்பு முகவரி: 206, 3 ஆம் தளம், பாலாஜி வளாகம், கோபாலபுரம் முதல் தெரு, கோயமுத்தூர்-641018 +91 8680865204